# பாடல்வழி மொழி கற்பித்தல்

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் பாடலைப் பாவனையோடும் எளிய உடல் அசைவுகளோடும் பாடி மகிழும்போது பாடலின் பொருளை விளங்கிக் கொள்வார்கள். பிள்ளைகள் பாடல் உணர்த்தும் கருத்துகளைப்பற்றிப் பேச முயல்வார்கள். பாடல்வழி மொழியைக் கற்பிப்பதால் பிள்ளைகள் ஆர்வத்துடன் மொழியைக் கற்றுக்கொள்வார்கள் .

**கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்**

✓ பாடலில் இடம்பெற்றுள்ள அசைவுகளைச் செய்தல்

2. **தாய்மொழி நடவடிக்கைகளை விரும்புதல்**

✓ பாடல்களில் கவர்ந்த வரிகளை ஒப்பித்தல் அல்லது பாடலுக்கு ஏற்றவாறு அசைவுகளைச் செய்தல்

✓ பாடல்களைக் கேட்கும்போதும் பாடல்களைப்பற்றி உரையாடும்போதும் எதிரில் இருப்பவரோடு கண் தொடர்பு கொள்ளுதல்

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

1. **புரிந்துணர்வுடன் கேட்டல்**

✓ பாடல்கள் பாடும்போது பொருத்தமான அசைவுகளையும் செய்கைகளையும் செய்தல்

**கற்றல் குறிக்கோள் 3: நம் பல்லினப் பண்பாட்டைத் தெரிந்துகொள்ளுதல்**

1. **பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் தெரிந்துகொள்ளுதல்**

✓ பாடல் எடுத்துரைக்கும் அறநெறிப் பண்புகள் குறித்த தங்கள் எண்ணங்களை/ சிந்தனைகளை வெளிப்படுத்துதல்

## 1. பாவனையும் உடல் அசைவுகளும்

பாவனையோடும் எளிய உடல் அசைவுகளோடும் கற்பிக்கப்படும் பாடல்கள் பிள்ளைகளை ஈர்க்கக்கூடியவையாக இருக்கும் (ஓமான் ரோட்ரிக்ஸ் 2004; சரிகோபன் & மெத்தின் 2000). பாடல்களைப் பாடக் கூச்சப்படும் பிள்ளைகள்

எளிய உடல் அசைவுகளை மட்டும் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து செய்ய விருப்பப்படலாம். காலப்போக்கில் அவர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்போது, பாடல்களை மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து பாட அவர்கள் முன்வருவார்கள்.






எளிய உடல் அசைவுகளின் மூலம் பாடலைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல்

## 2. <u>பாடல்களை ஒலிபரப்புதல்</u>

பிள்ளைகளுக்குப் பாடல்களை அறிமுகப்படுத்துவதற்கு முன் அவற்றை வகுப்பறையில் ஒலிபரப்பலாம் (ஐசன்பெர்க் & ஜலோங்கோ, 2009). பிள்ளைகள் வகுப்பறையில் ஏதேனும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும்போது பாடல்களைக் கேட்கச் செய்யலாம். இவ்வாறு செய்வதால் பிள்ளைகள் தங்களை அறியாமலேயே பாடலின் வரிகளையும் இசையையும் உள்வாங்கிக்கொள்கிறார்கள். பிறகு, அந்தப் பாடலைப் பிள்ளைகளுடன் சேர்ந்து பாடும்போது அவர்களால் அதை எளிதில் பாட முடியும்.



பாடலை ஒலிபரப்பிப் பிள்ளைகளைப் பாட ஊக்குவித்தல்

### 3. பாடலுக்கேற்ற முகமூடிகள்

பிராணிகள் தொடர்பான பாடல்களைப் பாடும்போது நீங்கள் பொருத்தமான முகமூடிகளைப் பயன்படுத்தலாம். பிள்ளைகள் எல்லாரையும் முகமூடிகளை அணிந்துகொண்டு பாட ஊக்குவிக்கலாம். இப்படிச் செய்வதால் பாடப்படும் பாடல்கள் பிள்ளைகளின் மனங்களைக் கவர்வதோடு அவர்களின் நினைவிலும் நிற்கும்.

**எ-டு; யானை வருது – குழந்தை கவிஞர் அழ.வள்ளியப்பா**





முகமூடிகளை அணிந்துகொண்டு பாடலைப் பாட ஊக்குவித்தல்

### 4. இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

பாடல்களைப் பாடும்போது நீங்கள் ஏதேனும் இசைக்கருவியை வாசிக்கலாம் அல்லது வகுப்பில் இருக்கும் சில பொருள்களையே இசைக்கருவிகளாகப் பயன்படுத்தலாம். பாடல்களை இசையோடு பாடும்போது பிள்ளைகளுக்கு உற்சாகம் பிறக்கும். பிள்ளைகளையும் இசைக்கருவிகளை உருவாக்கச் சொல்லலாம். அவ்வாறு உருவாக்கும்போது பிள்ளைகளுடைய படைப்பாக்கச் சிந்தனை மேம்படுகிறது என்று கூறுகிறார் கிர்மானி (2007).

**எ-டு: தானியங்கள், கோலிகள், வண்ண மணிகள், சிறிய கூழாங்கற்கள், வண்ண மணல் முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றால் நிரப்பப்பட்ட காலியான தண்ணீர்ப் புட்டிகள்.**



**காலியான தண்ணீர்ப் புட்டிகளில் பிள்ளைகள் வண்ண மணிகளை நிரப்புதல்**



**பிள்ளைகள் தாங்கள் உருவாக்கிய இசைக் கருவியைக்கொண்டு இசை எழுப்பிப் பாடுதல்**

## 5. <u>கதைகளைப் பாடல்களாகப் பாடுதல்</u>

கதைகளைப் பொருத்தமான தாளத்தோடு பிள்ளைகளுக்குப் பாடிக் காட்டலாம்; அப்போது மீண்டும் மீண்டும் வரும் சொற்களைத் தாளத்தோடு பாடப் பிள்ளைகளை ஊக்குவிக்கலாம். கதைகளைப் பாடலாகப் பாடும்போது பிள்ளைகள் ஈடுபாட்டுடன் கேட்பார்கள்; பாடுவார்கள்.

## எ-டு; சிறுவர் கதைநூல் – பழங்கள்



‘பழங்கள்’ என்னும் கதையை ஆசிரியர் பாடலாகப் பாடுதல்

**பாடல்களின்வழிப் பண்பாட்டு கூறுகளையும், விழுமியங்களையும் அறிமுகப்படுத்தலாம்.**



.*****************************************